# ★ அரச படையினருக்கு பெரும் பின்னடைவு

★ விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 01 இதழ் 127
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17 - 7 - 1995

17-7-1995

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் படையினர் மேற்கொண்டுவரும் 'ஒப்பரேஷன் லீப் போவேட்' இராணுவ நடவடிக்கைக்கு காங்கேசன்துறையில் நேற்று இடம்பெற்ற கடற்படைக் கப்பல்கள் மூழ்கடிப்பு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதுடன் அவர்களுக்கு பலத்த அடியை கொடுத்துள்ளதாக அமல் ஜெயசிங்கா பி: பி: சி. சிங்களசேவைக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அரசாங்கம் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற திட்டமிடப்பட்டிருந்தது. இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்

(5-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி நோக்கி அகோர ஷெல் வீச்சு

### ஒருவர் பலியானர்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 3 மணிக்கு வடமராட்சிப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல்லினல் வல்வெட்டித்துறை மயிலந்தனையில் ஒருவர் உடல் சிதறிப்பலியானர். பருத்தித்துறை மாதனைப்பகுதியில் நால்வர் படுகாயமடைந்தனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## ★ காங்கேசன் கடற்படைத் தளத்தில்

# பாரிய இரு போர்க் கப்பல்கள்

# கடற் புலிகளால் தகர்த்தழிப்பு

## பல கடற்படையினர் பலி

(யாழ்ப்பாணம்)
காங்கேன்சன்துறை கடற்படைத்தளத்தினுள் புகுந்த கடற்புலிகள் அங்கு நிறுத்தப்பட்டிருந்த இரு பாரிய போர்க்கப்பல்களை தகர்த்தழித்துள்ளனர். நேற்று அதிகாலை இடப்பெற்ற இத்துணிகரத் தாக்குதல் சுமார் 4 மணிநேரம் இடப்பெற்றது. இக்கப்பல் தகர்ப்பின்போது பல கடற்படையினரும் பலியாகியுள்ளனர்'

(5ம் பக்கம் பார்க்க)

## துறைமுக பகுதியில் உக்கிர மோதல்

காங்கேசன்துறை துறைமுகபகுதியினுள் விடுதலைப்புலிகள் ஊடுருவி தாக்கத் தொடங்கியதும் துறைமுகத்திற்கு உள்ளேயும் வெளிப்புறப்பகுதியிலும் உக்கிரமோதல்வெடித்தது. புலிகள் பெருமளவு படையினரை எதிர்த்து தீரமாக போராடினுர்கள். இதை தொடர்ந்து கடற்கரும்புலிகளும் சுலோஜன் விஷேட நீரடி நீச்சல் பிரிவினரின் கப்பல்கள் மீதான தாக்குதலினல் துறைமுகப்பகுதியிலும் பல படையினர் கொல்லப்பட்டிருக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

## கடைசிக் கப்பலும் அழிந்துவிட்டது

இலங்கை கடற்படையினரிடம் நன்கு செயற்படற் கூடிய நிலையிலிருந்த கடைசிக் கட்டளைக் கப்பலான 'எடித்தாரா' வும் நேற்றுடன் அழிந்து விட்டதாக பி பி. ஸி; தெரிவித்தது; கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி மற்ருெரு கட்டளைக்கப்பலான 'அபீத்தா' காங்கேசன் கடற்படைத் தளத்தினுள் கடற்புலிகளால் தகர்க்கப்பட்டது: மற்ருெரு கட்டளைக் கப்பல் செயற்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் நேற்று ''எடித்தாரா'' தகர்க்கப்பட்டதானது கடற்படையின் கடைசிக் கட்டளைக் கப்பலும் அழிந்து விட்டதாகவே கருதப்படுகிறது. இதன் மூலம் அரசு புதியதொரு சிக்கலை எதிர்கொள்வதாகவும் பி. பி ஸி தெரிவித்தது.

## முப்படையினருக்கும் பேரழிவு

வலிகாமம் பகுதியில் படையினர் கடந்த வாரம் ஆரம்பித்த 'ஒபபரேஷன் லீப் போவேட்' இராணுவ நடவடிக்கையில் முப்படைகளும் பேரழிவை சந்தித்துள்ளன; இராணுவம் தரையில் பல சிப்பாய்களை இழந்தது. விமானப்படை புக்காரா விமானத்தையும் இரு ஹெலிகொப்டர்களையும் இழந்தது, நேற்று கடற்படை இரு பாரிய போர்க்கப்பல்களை இழந்துள்ளது. புலிப்பாய்ச்சலில் ஈடுபடும் புலிகளின் முப்படைகளே அரசபடையினருக்கு இத்தாக்குதலில் பெநம் பேழிவை ஏற்படுத்தியுள்ளது. ஒரு இராணுவ நடவடிக்கையில் அரச படைகள் சந்தித்த மிகப்பெரும் பேரழிவு இவையாகும்;

## படை நடவடிக்கை நிறுத்தப்படும்?

யாழ்: குடாவில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வரும் படையினர் நேற்றைய கப்பல் தகர்த்தழிப்பினுல் தனது படை நடவடிக்கையை கைவிடும் நிலைக்கு புள்ளப்பட்டுள்ளதாக பி. பி ஸி தெரிவித்தது. தரைவழியும் வான் வழியும் துண்டிக்கப்பட்ட நிலையில் கடற்பாதையையே அரசு நம்பியிருந்தது. இக்கப்பல் தகர்ப்பின் மூலம் அதுவும் சாத்தியமற்றதாகி விடலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் யாழ். குடாவிற்குள் கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்ட படையினருக்கான விநியோகங்கள் இல்லாது போகலாம் என்றும் இராணுவத்தினர் தமது படை நடவடிக்கையை கைவிடும் நிலை ஏற்படலாமென்றும் பி. பி. ஸி கூறியது.

(6ம் பக்கம் பார்க்க)

## இரு தளபதிகள் உட்பட 17 புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் கடற்புலிகள் மேற்கொண்ட வெற்றிகரத் தாக்குதலில், இரு தளபதிகள் உட்பட 13 கடற்புலிகளும், நான்கு கடற் கரும்புலிகளும் வீரச் சாவடைந்தனர்.

கடற் புலிகள் விபரம்

★ லெப். கேணல் மாதவி (திருநாவுக்கரசு திருச்செல்வி, இன்பருட்டி, அல்வாய் வடக்கு அல்வாய்).

★ கப்டன் கமலம் (குழந்தைவேல், சிறீரஞ்சினி, பயிரிக்

(5ம் பக்கம் பார்க்க)

## மிகப் பெரும் கடற்போர்

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் நேற்று அதிகாலை கடற் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் கடற்புலிகளின் தோற்றத்தின் பின்னர் நடைபெற்ற மிகப்பெரும் ''கடற்சமர்'' என தெரிவிக்கப்படுகிறது.

(5ம்பக்கம் பார்க்க)

## 'எடித்தாரா' கப்பல் மூழ்கிக்கொண்டிருக்கிறது

(கொழும்பு)
காங்கேசன் துறை கடற் பகுதியில் நங்கூரமிடப்பட்ட நிலையிலிருந்த 'எடித்தாரா' கப்பலை விடுதலைப்புலிகளின் கரும்புலிகள் அணி தகர்த்ததை தொடர்ந்து அக் கப்பல் மூழ்கிக் கொண்டிருப்பதாக ரூபவாஹினி நேற்று

(5ம் பக்கம் பாக்க)

## மூழ்கிய கப்பலிலிருந்து சடலங்கள் மீட்பு

(கொழும்பு)
கடற்புலிகளால் தகர்க்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்ட கப்பலிலிருந்து இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கப்பல் தகர்ப்பின்போது

(6ம பக்கம் பார்க்க)

## புலிப் பாய்ச்சலின் ஒரு அங்கமே இது

(யாழ்ப்பாணம்)
காங்கேசன் கடற்படைத் தளப்பகுதியில் இரு பாரிய கப்பல்கள் தகர்க்கப்பட்டமை விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வரும் ''புலிப் பாய்ச்சல்'' நடவடிக்கையின் ஒரு அங்கமே எனத் தெரிவிக்கப்படுகிறது.

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### புலமைப் பரிசில்

ஆண்டு-5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினாப் பத்திரம் 1, வினாப் பத்திரம் 2க்குரிய "பொது விவேகம் பொதறிவு" வெளிவந்துவிட்டது: வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஏ-5077


# உரிய ஆவணங்கள் இன்மையால் இலங்கை தமிழ் அகதிகள் மீது வழக்கு

## இந்திய அரசு நடவடிக்கை

(சென்னை)

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு அகதிமுகாமகளில்உள்ள இலங்கை தமிழ் அகதிகள் மீது உரிய ஆவணங்கள் இலலாமையால் அந்நிய சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக இவ் அகதிகள் தேசிய மனித உரிமைகள் கமிஷனிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இந்த முகாம்களிலுள்ளஉணவு மற்றும் மருத்துவ வசதியீனங்கள் பற்றியும் மேற்படி அகதிகள் புகார்தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் பலர் தாயகம் திரும்பத்தயாராக இருப்பதாகவும் அதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் தேசிய மனித உரிமைகள் கமிஷனிடம் தமது விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் 44 000 இலங்கைத்தமிழ் அகதிகள் தாயகம் திருப்பிஅனுப்பவேண்டிய நிலையிலிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது:

இலங்கையின் தமிழ் பகுதிகளில் தற்போது இராணுவ தாக்குதல்கள் இடம் பெற்று வருகிறபோதும் இந்திய மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் கொடுக்கும் நெருக்கடியினால் அவர்கள் தமது தாயகம் திரும்ப விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது. -ரி

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கான சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் வைக்கப்பட்ட ஊழியர் ஒருவரின் சைக்கிள் நேற்று முன்தினம் பகல் திருடப்பட்டுள்ளது,

அரியாலையைச் சேர்ந்த புவனேசன் லோகாம்பிகை என்பவரின் சைக்கிலே திருட்டுப்போனதாகும்.

இதுபற்றி வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 90

## விளையாட்டு உபகரணங்கள்

[கொழும்புத்துறை]

வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கான ஐம்பது ஆயிரம்ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

இப்பகுதிக்கென தனியான விளையாட்டுச் சீருடையும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. 154

## தட்டுப்பாடு

[குருநகர்]

இராணுவ நடவடிக்கை காரணமாக கரையோரத்தில் வாழும் குருநகர், நாவாந்துறை, பாசையூர் மீனவர்களில் பெரும்பாலானோர் தமது இருப்பிடங்களை விட்டு வேறு இடத்துக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளமையினால் குருநகர் சந்தையில் மீன்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்றது. 95

## அகதிமுகாம்களில் சுகாதார இணைப்பாளர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களின் சுகாதார சேவைகளைக் கவனிப்பதற்காக சுகாதார இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

யாழ் நகர்ப் பகுதிகளில் அமைந்திருக்கும் சகல முகாம்களுக்கும் இருசுகாதார இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு சுகாதார தேவைகளை உடனுக்குடன் கவனித்து வருகிறார்கள். இவ் இணைப்பாளர்கள் தினமும் மலசலகூடம் பராமரிப்பு, சுத்திகரிப்புச் சேவை, சுத்திகரிப்பதில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, வாகனங்கள் மூலம் கழிவுப் பொருட்கள் அகற்றப்படுவது, குடிநீர் வழங்கல் மருந்து தெளித்தல், முதலுதவிச் சேவை, இரவு நேரங்களில் சுகாதாரச் சுத்திகரிப்பு ஆகிய சேவைகள் தினமும் ஒழுங்காக நடைபெற்று வருகிறதா என்பதை இவர்கள் கவனித்து இதற்கான ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றனர் 162

# இரத்த தானம் செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இன்றைய இக்கட்டான நிலையில் வேதனையின் விளிம்பில் துடியாய் துடிக்கும், காயமடைந்து அவலப்படும் மக்களுக்கு இரத்ததானம் செய்யுமாறு யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கும் மேற்படி நிலையங்களின் சம்மேளன செயலாளர் திரு, இ. தவகோபால் கோரிக்கை விடுத்துள்ளார்,

"எமது சம்மேளனத்தின் அன்பான வேண்டுகோளை ஏற்று இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்தமைக்கும் தத்தமது பகுதிகளில் பதுங்கு குழிகளை அமைத்த சகல சனசமூக நிலையங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளும் அதே நேரத்தில் இன்னமும் பதுங்கு குழிகளை வெட்டாத சனசமூக நிலையங்களை தாமதியாது வெட்டும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம் என்றும் அவர் கேட்டுள்ளார். -162-ரி

## நல்லூரில் இயங்கும்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகங்கள் நல்லூர் பிரதேச செயலர் அலுவலக கேட்போர் கூடத்தில் இன்று 17ம் திகதி திங்கள் முதல் தற்காலிகமாக இயங்கவுள்ளது. -71

## கோப்பாய் பயிற்சி கல்லுரி முகாமில் மருத்துவ அலுவலகம்

(கோப்பாய்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் அகதிகள் முகாம்களில் தொற்றுநோய் பரவத் தொடங்கியுள்ளது.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அகதிகள் முகாம் கிறிஸ்தவக் கல்லூரி அகதி முகாம் போன்ற முகாம்களில் கண் நோய் பரவிவருகின்றது இதையடுத்து கோப்பாய்ப் பகுதி மருத்துவ அலுவலர்கள் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் ஒன்றிணைந்து கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மருத்துவ அலுவலகம் ஒன்றை அமைத்துள்ளனர்.

மேற்படி அகதிகள் முகாமில் கண் நோய்க்கு உட்பட்ட மக்களுக்கு, மருத்துவர்கள் இலவச மருந்து வகைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

## மானிப்பாய், சங்கானை பனை, தென்னை வள சமாசம் கோப்பாயில் இயங்கும்

[கோப்பாய்]

இடம்பெயர்ந்த வலி-மேற்கு பகுதி, சங்கானை, மானிப்பாய் பகுதிகளில் இயங்கி வந்த பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் சமாசம், கிளைகள், சங்கள் இணைந்து கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி சங்கத்தில் தற்காலிகமாக இயங்க ஆரமபித்துள்ளன.

இச்சங்கங்களால்தமது இடம் பெயர்ந்த அங்கத்தவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா ஊக்குவிப்புக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 166

## உடுபுடவைகள் உதவுக

[யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களின் பாவனைக்கு உகந்த புதிய அல்லது பழைய உடுபுடவைகளையும் அன்பளிப்புச் செய்யக்கூடிய வேறு பொருட்களையும், 'அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983' 374, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள [கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாமையில்] காரியாலயத்தில் ஒப்படைக்க விரும்புவோர் உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ர

## இலங்கை வங்கி வாடிக்கையாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி மானிப்பாய், காங்கேசன்துறைக் கிளைகளின் வாடிக்கையாளர்களுக்கு, இன்று திங்கட்கிழமையிலிருந்து காலை 9 மணி முதல் 10 வணி வரை மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி யாழ்: மாவட்டக் காரியாலயத்தில் வழங்க உள்ளது என்று இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## கோப்பாய் முகாம்களில் இடமில்லை; நீர்வேலி செல்ல ஆலோசனை

(கோப்பாய்)

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள அனைத்துப் பாடசாலைகளினும், கோவில்களும், தேவாலயங்களுக்கும் இடம் பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிகின்றது.

வலி- மேற்குப் பகுதிகளில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையாலும் அச்சுவேலிப் பகுதியில் பதற்றம் காரணமாக இடம் பெயரும் மக்களாலும் இப்பகுதிகளில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கி வருகின்றனர்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை போன்ற அகதிகள் முகாம்கள் மக்களால் நிரம்பியுள்ளதை அடுத்து நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு செல்லுமாறு இடம் பெயர்ந்து வந்துகொண்டிருக்கும் மக்களுக்கு ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது. -166

## உணவு முத்திரைக்கு பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வறுமை நிவாரண முத்திரையின் முதல் இரண்டு புள்ளிகளுக்கும் உணவுப் பொருட்கள் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இம்முத்திரையின் புள்ளிகளுக்கு குத்தரிசியை வழங்குகிறது.

இதனைவிட இடம் பெயர்ந்தவர்களுக்கான உணவுப் பொருட்கள் வழங்கும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 170 ரி

## குழாய்க்கிணறு

(கொழும்புத்துறை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிராமிய எழுச்சி உதயத் திட்டத்தின் கீழ் ஜெ செந்தில் நகர் குடியிருப்பில் ரூபா நாற்பது ஆயிரம செலவில் குழாய்க் கிணறு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. 154


தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணியாளர்களின்

# கவனத்திற்கு

தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிகள் தொடர்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயலகத்தில் தற்காலிகமாக இயங்கும் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

த. பொ. மே. நிறுவனம்

(ஏ-5107)


## பொதுமக்கள் வீடுகளில் ராணுவம் சூறையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு வடக்குப்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது அள்வெட்டிப்பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து இராணுவத்தினரால் பெறுமதிவாய்ந்த பொருள்கள் சூறையாடப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அப்பகுதிகளில் காணப்பட்ட பொதுமக்களின் ஆடுகள், மாடுகள், கோழிகள் யாவும் இராணுவத்தினரின் உணவுக்காகப் பாவிக்கப்பட்டன.

அதிகளவில் தினமும் இவர்கள் கோழிகளையே பிடித்துள்ளனர். 90-ரி

## செப்ரிசீமியாவுக்கு சிறுமி மரணம்

[யாழ்ப்பாணம்]

செப்ரிசீமியா நோயினால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறு குழந்தை ஒன்று நேற்று அங்கு மரணமானது.

கொழும்புத்துறை, மணியன் தோட்டத்தைச் சேர்ந்த ரி. சுபெஷிகா என்ற 2 மாதப் பெண்குழந்தையே மரணமான குழந்தையாகும். 90-கி

## யாழ். ஆஸ்பத்திரியில் ஊழியர் தங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பிரிவில் தற்போது தொடர்ந்து இடம் பெற்றுவரும் பாரிய இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்தும் கடமைக்குச் சமுகமளிக்கமுடியாதுள்ள ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி, அவர்கள் குடும்ப

(5-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

அணிகளையும் பணியாளர்களையும் தக்க இடத்தில் வைக்கவேண்டும்: தங்கத்தில் பதிக்கவேண்டிய மாணிக்கத்தைத் தகரத்தில் பதித்தால் அதற்கு அது கோபித்துக்கொள்வதில்லை. ஒளிவிட்டுப் பிரகாசிக்காமலும் இருப்பது இல்லை. ஆனாலும் பதித்தவனுடைய திறமை அதனால் பரிகாசத்திற்கு இடமாகிறது;

கீதோபதேசம்

# நமது நோக்கு

## இன்றைய கடமை

தேசியத் தலைவர் பிரபாகரனின் வழி நடத்தலின் கீழ் ''புலி பாய்ச்சல்'' நடவடிக்கை மூலம் விடுதலைப்புலிகள் இராணுவம் முன்னேறிய நிலைகளிலிருந்து இராணுவம் விரட்டியடிக்கப்பட்டுள்ளது. முழுக்குடாநாடும் எதிரியின் கைவசம் போய்விடுமோ என்று மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தவேளையில் தேசியத் தலைவரின் அவருக்கே உரிய யுத்த தந்திரோபாயம் மூலம் எதிரி விரட்டியடிக்கப்பட்டுள்ளான். இது போதுமா? தமிழ் மக்கள் தொடர்ந்தும் சுற்றிவளைப்புக்குள் முடக்கப்பட்டு ஷெல் ஆபத்துக்களுக்கும், பீரங்கித்தாக்குதல்களுக்கும் உள்ளாகிக்கொண்டு தான் இருக்கவேண்டுமா?

எதிரியானவன் மனம் சோர்ந்து கதிகலங்கியிருக்கும் இவ்வேளையில் நாங்கள் எங்கள் மண்ணை முற்றாக மீட்டெடுப்பதற்கு முனையத்தேவையில்லையா? ஷெல் அடித்தவுடனும் பீரங்கியடித்தவுடனும் விமானத்தாக்குதல் நடத்தப்படும் போதும் எமது மக்கள் தம் இடங்களையும் காலம் காலங்களாக சேர்த்த சொத்துக்களையும் கைவிட்டு இடம்பெயர்ந்தோர் என நாமம் சூட்டப்பட்டு பள்ளிக்கூடங்களிலும் கோவில்களிலும் தஞ்சம் புகவேண்டிய நிலையில் உள்ளனர்.

கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள்பாதிக்கப்பட்டு கல்வியை தொடர முடியாத நிலையில் இருக்கிறார்கள். எதிரியானவன் விளைவித்த அனர்த்தத்தால் நூற்றுக்கணக்கான பாடசாலைகளில் கல்வி பயின்ற மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். க. பொ. த. உயர்வகுப்பு மாணவர்களுக்கு எதிர்வரும் 5ம் திகதி பரீட்சை ஆரம்பிக்கவுள்ளது. அதற்குள் பாடசாலைகளுக்கு திரும்பி செல்லமுடியுமா? கண்ணிவெடிகள் அகற்றப்படும் வரை மீட்டெடுத்த பிரதேசத்துக்குள் செல்வது அபாயம். அதைத் தவிர அந்தப்பாடசாலைகளில் படித்துக்கொண்டிருந்த மாணவர்களின் மனோநிலை பரீட்சை எழுதக்கூடிய நிலையிலும் கட்டாயம் இருக்கமுடியாது.

இதே நிலையில் தான் க.பொ. த. சாதாரணப் பரீட்சையைப் பொறுத்தளவிலும் நிலைமை உள்ளது.

தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு எம்மண் முற்றாக மீட்கப்படவேண்டும். வாழ்வா சாவா என்ற நிலையில் உள்ள தமிழ் மக்களுக்கு நல்லதோர் சந்தர்ப்பம் உருவாகியுள்ள இவ்வேளையை சரியாக உபயோகிக்கவேண்டும். எதிரியானவன் பலவீனமடைந்துள்ளான்; உலக அரங்கிலும் அவனது நடவடிக்கை விமர்சிக்கப்பட்டு அதிருப்திக்குள்ளாகியுள்ளது. எம்மைப் பொறுத்த அளவில் தமிழ் மக்களுக்கு என்றும் இருந்திராத நல்ல தலைமை கிடைத்துள்ளது. விடுதலைப்புலி வீரர்களின் போர் திறன், மூலோபாய தந்திரோபாயங்கள் உலகிலேயே சிறந்ததாக அமைந்துள்ளமை எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவிடயம்.

உலக அரங்கில் விடுதலைப்புலிகளின் நிலைமை படிப்படியாக முன்னேறிக்கொண்டு வருகிறது. தமிழகத்தில் மக்கள் மீண்டும் உக்கிரமாகவிடுதலைப்புலிகள் அமைப்பை ஆதரித்து மத்திய அரசுக்கு எதிராக வெளிப்படையாக செயல்படத்தொடங்கிவிட்டார்கள். மேற்குலக நாடுகளில் உள்ள தமிழரும் ஆர்ப்பாட்டபேரணிகளை தாம் வாழும் நாடுகளில் நடத்தி தமது உணர்வு அலைகளை தமிழீழத்தின் சார்பில் செலுத்தி வருகிறார்கள். இவற்றின் மூலம் தாம் வாழும் நாடுகளில் உள்ள பொதுமக்களை எம்சார்பில் வென்றெடுத்து அதன் மூலம் அந்நாட்டு அரசுக்கு நெருக்கங்களைக்கொடுத்து சிறிலங்கா அரசுக்கு உதவிகளை வழங்காத நிலையை உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கின்றது;

சகல சந்தர்ப்ப சூழ்நிலைகள்எம்பக்கம் இருக்கும் போது எதிரியைத் தாக்கி விரட்டுவதற்கு தாமதிப்போமானல் பின்னர் மனம் வருந்த நேரிடும்.

எம்மிடம் ஆயுதபலம் கூடுதலாக இருக்கிறது; எதிரியிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள் ஏராளம். ஆனல் அவற்றை கையிலெடுத்து பாவிப்பதற்கு ஆட்கள் பற்றாக்குறை. ஆகவே நாம் இந்நேரத்தில் என்ன செய்யவேண்டும்? இளைஞர்களும், யுவதிகளும் ஆயிரக்கணக்கில் களத்தில் குதிக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது. காலம் தாமதிக்கக் கூடாது. எல்லோரும் களத்தில் இறங்கி விடுதலைப்புலிகளின் கைகளை ஓங்க வைக்க வேண்டும். வயது வந்தவர்களும் பல வகைகளில் தங்களின் பங்களிப்புகளைச் செய்யலாம்;

## உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான ஒரு வாரகால இலவச உணவுப்பொருள்களை தென்மராட்சி பகுதியில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகித்து வருகின்றன.

அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

170-மி

# அடுத்த கட்டத் தாக்குதலுக்கு படையினர் திட்டமிட்டு வருகின்றனர்

(கொழும்பு)

வடபகுதியில் அடுத்த கட்ட இராணுவத் தாக்குதலுக்கு படையினர் திட்டமிட்டு வருவதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்ட முன்னேறி பாய்தல் நடவடிக்கை ஒரு வாரத்தை கடந்துவிட்ட நிலையில் அடுத்த கட்ட தாக்குதல் எப்போதும் ஆரம்பிக்கப்படலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஞாயிறு ஆரம்பமான முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையில் 4 படை அணிகள் ஈடுபட்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை மூலம் அளவெட்டி, சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி தொட்டிலடி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினர் தற்போது தமது பழைய நிலைகளுக்குத் திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் தொடக்கம் மேற்படி பகுதிகளில் அமைதி நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட பகுதிகள் தற்போது விடுதலைப் புலிகள் வசம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ரி

## படுகொலையை நிறுத்துக! பாப்பரசர் கோரிக்கை

(ரோம்)

யாழ்ப்பாணத்தில் தமிழ்மக்களைப் படுகொலை செய்யும் செயலை சிறிலங்கா அரசு உடனடியாகநிறுத்தவேண்டுமென உலக கத்தோலிக்கர்களின் தலைவர் பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் கேட்டுள்ளார்.

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் வத்திக்கானில் தனது தினசரிப் பிரசங்கம் ஒன்றில் சிறிலங்கா அரசு தமிழ் மக்களை கொன்றொழிப்பதை நிறுத்த வேண்டும் எனவும் யாழ்ப்பாணத்தில் தேவாலயம் உட்பட பல்வேறு பகுதிகளிலும் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து தாம் வருந்துவதாகவும் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளைக் கண்டித்து கத்தோலிக்க ஆயர்களும் கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது; -ரி-சி

## இடம்பெயர்ந்தவர்களை அகதி முகாம்களில் தங்குமாறு அறிவுறுத்து

[யாழ்ப்பாணம்]

சுகாதார அடிப்படை வசதிகள் செய்யப்படாத இடங்களில் இடம் பெயர்ந்து வரும் மக்கள் தங்குவது தவிர்த்துக் கொள்ளப்படவேண்டும் என யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வரும் மக்கள் தங்குவதற்கென அமைக்கப்பட்டு இருக்கும் முகாம்களில் தங்குமாறும், சுகாதார அடிப்படை வசதிகள் இல்லாத இடங்களில் பொதுமக்கள் தங்குவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார அடிப்படை வசதிகள் செய்யப்படாத இடங்களில் பொதுமக்கள் தங்குவதால் இப்பகுதிகளில் மலசலம் கழிப்பதாலும், கழிவுப் பொருட்களைக் கண்ட இடங்களில் போடுவதாலும், சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படக்கூடும் இதனால் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கு ஏதுவாகும்.

தற்போதைய சூழ்நிலையில் மாநகராட்சி மன்றம் மேலதிக சுகாதார அடிப்படை வசதிகளைச் செய்துகொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாகப் பொதுமக்கள் சிறந்த பராமரிப்பு மூலம் கழிவுப் பொருட்களை அதற்கென அமைக்கப்பட்டிருக்கும் தொட்டிகளில் போடுவதுடன், மலசலகூடங்களை மக்கள் மலசலம் கழிப்பதற்குப் பாவிப்பதன் மூலம் மாநகரசபை ஊழியர்களுடன் ஒத்துழைக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். 162

## அகதிகள் பாவனைக்கு தெருவிளக்குகள்

(குருநகர்)

யாழ். மாநகரசபையில் குருநகர் பகுதி மக்களின் பாவனைக்கென குருநகரிலுள்ள வீதியோரங்களில் அமைக்கப்பட்டு நாளாந்த பாவனையில் இருந்த இருபத்தாறு தெருவிளக்குகள் நேற்றைய தினம் யாழ் மாநகர சபையினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இவை இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள மக்களின் பாவனைக்கு அமைக்கப்பட உள்ளது. -95

## கலைநகரில்தஞ்சம்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் என்னும் கிராமத்தைச்சேர்ந்த குடும்பங்கள் பல வெளியே வரமுடியா நிலையில் அங்கு தங்கியுள்ளதாகவும் அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து கலைநகர் கப்பும்பலே/க வைரவர் கோவிலில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -139

## இராசி பலன்

**17-07-1995**

திங்கட்கிழமை

[தமிழுக்கு ஆடி 1]

பஞ்சமி மு. ப. 9-13 வரை பூரட்டாதி பி. ப. 3-11 வரை மரணயோகம் இராகுகாலம் காலை 7-30 முதல் 9-00 வரை சுபவேளை பகல் 12-00 முதல் 1-30வரை.

மேஷம்: நிதானக் குறைவு குடும்பசோதனை அலைச்சல்.

இடம்: சுபகருமமுயற்சி, புத்திரர் மகிழ்ச்சி பணவரவு.

மிதுனம்: தொழில் ஆதாயம் கலைத்துறை ஆர்வம், பாராட்டு.

கடகம்: சகிப்புத் தன்மை, உடல் உபாதை கடன்பகை.

சிங்கம்: நண்பர் வெறுப்பு, தைரியக்குறைவு வீண் செலவு

கன்னி: குடும்ப சுபீட்சம் தெய்வப்பணி சாமர்த்தியம்

துலாம்: தொழில் பாதிப்பு விரோதிகள் துன்பம் வெறுப்பு,

விருச்சிகம்: ஒற்றுமைக் குறைவு தாயார் கவலை அவப்பெயர்

தனுசு: மேலதிகாரிகள் குறை வாய்ப்பின்மைதொழில் கேடு

மகரம்: சமரசமுயற்சி, தொழில்பெருமை, கல்வி ஞானம்.

கும்பம்: அயலவர்கோபம், மனச்சுமை அகால உணவு.

மீனம்: பிறர் தயவு, தகாத செயல், ஆவேசம்;

— ஜோஸ்யர்

## தாதிகள் பயிற்சி பாடசாலை மாணவர்களுக்கு அவசர அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனு வைத்திய சாலையில் ஊழியர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்துத் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தாதிகள் பயிற்சி பாடசாலையின் மாணவர்களை உடனடியாக வைத்தியசாலையில் சேவையாற்றுவதற்குச் சமூகமளிக்குமாறு, தாதிகள் பயிற்சி பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

170

## துணிந்து வா!

புலிநடக்கும் தேசத்தில்
புல்லுத் தடுக்கியவன்
கிலியடைந்து உயிர்விட்டான்
என்றாரும்
பழி சொலவே
மெலிவடைந்து வீதியிலே
மூட்டையுடன் தூங்காதே
விழிதிறவாய்
வந்துடனே சேர்!

வீதியிலே கஞ்சியெவர்
வார்ப்பார் தலைசரிக்க
வீடெங்கே யென்றினைத்து
விம்முகிறாய்
சேதியிதே -
கேட்பாய் புலிக்குருளை
கால்நீட்டிப் பாய்கிறது
மீட்பார் நிலந்
துணிந்துவா!

— நிம்மதி

## ★ 'ஒப்பரேஷன் புலிப்பாய்ச்சல்' மூலம்

# பெரும் பேரழிவிலிருந்து தமிழர்கள் புலிகளால் காப்பாற்றப்பட்டனர்!

வலிமேற்கு, வலி வடக்குப் பகுதியில் கடந்த 9-ம் திகதி முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையை பெரும் எடுப்பில் ஆரம்பித்த இராணுவத்தினர் ஐந்து நாட்களின் பின விடுதலைப் புலிகள் தொடுத்த ''புலிப்பாய்ச்சல்'' நடவடிக்கையை அடுத்து குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து பின்வாங்கிச் சென்றுள்ளது ஈழப் போரில் மற்றுமொரு வளர்ச்சி படியாக அமைந்துள்ளது.

தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் அவர்களினல் ''ஒப்பரேஷன் புலிப்பாய்ச்சல்'' என்ற பெயரிட்டு இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் மூலம் வடபகுதியில் இராணுவத்தினர் பிடித்து வைத்திருக்கும்இடங்களை தக்கவைக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் குவிக்கப்பட்டு பல நவீன கனரக ஆயுதங்கள் மற்றும் கடற்படை, விமானப்படை உதவியுடன் பெரும் எடுப்பில் இராணுவத்தினரால் இந்த 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை உட்பட பல சர்வதேச தொடர்பு சாதனங்களில் மிகவும்முக்கியத்துவம்வாய்ந்த செய்தியாக தெரிவிக்கப்பட்ட முன்னேறிப் பாய்தலில்குதித்த படையினர் இன்று ஒப்பரேஷன் புலிப்பாய்ச்சலையடுத்து பின்னேக்கிச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அப்பகுதியில் பிடிக்கப்பட்ட இடங்களில் படையினர் தம்மைப் பலப்படுத்தி வருவதாகவும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் அரசு மீண்டும் மீண்டும் பொய்ப்பிரச்சாரங்களை மேற்கொண்டுவருகிறது.

சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தவும், தென்னிலங்கை அரசியலில் தனக்கு ஏற்படும் சரிவைச் சமாளிக்கவும் ஜனதிபதி சந்திரிகா தலைமையிலான பொ. ஐ. மு. அரசு சிறிலங்காவில் ஆட்சிக்குவந்த முன்னைய அரசுகளைவிட மேலும் அதிகப்படியான பொய்ப்பிரசாரங்களில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின்போது இருநூறுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கண்மூடித்தனமான குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல்களினல் கொல்லப்பட்டபோதும் இத்தாக்குதலில் புலிகளே கொல்லப்பட்டதாக பொய்ப்பிரசாரம் மேற்கொண்டு அரசு திருப்தியடைந்து கொண்டிருந்தது. ஆனல் அரசின் பொய்ப்பிரசாரங்களை முறியடிக்கும் வகையில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் போன்ற அமைப்புகள் உண்மையை உலகுக்கு படம்பிடித்துக்காட்டின இவ்வாறு அரசின் திட்டமிட்ட சில பொய்யான பிரசாரங்கள் காலத்திற்குக் காலம் முறியடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை மூலம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, அளவெட்டி ஆகிய பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாகக்கூறிய அரசு ஐந்து நாட்களின்பின் புலிகளிடம் அப்பிரதேசங்களை இழந்துள்ளதன் மூலம் வருங்காலங்களில் வடபகுதிமீது பெரும் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளிலிருந்து புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சிய இராணுவமுகாம்களை மூடிய அரசு வடக்கிலும் பல இடங்களை தொடர்ந்து தக்க வைக்கமுடியாதநிலையில் திண்டாடி வருகின்றனர்.

துரை

பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இராணுவ சீருடையில் யுத்த பிரதேசங்களுக்கு வந்து பொல்லுப்பிடித்தவாறு பல படை அதிகாரிகள் புடைசூழ தாண்டித் தாண்டி வருவது ரூபவாஹினி செய்திகளின் போது அடிக்கடி ஒளிபரப்பப்பட்டுவந்தது.

சினிமா நடிகர்போல் ஸ்ரண்ட் வேடம் போட்டு திரு. ரத்வத்த சிங்கள மக்களை ஏமாற்றப் பார்க்கின்ருர். இன்று குறிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் புலிகள் கைப்பற்றியதை சிங்கள மக்கள் அறியும் போது ரத்வத்தை போன்றவர்களின் முகத்திரை கிழியும் என்பது நிதர்சனம்.

ஏதும் அறியாத அப்பாவிப் பொதுமக்களை குண்டு வீசிக் கொன்று குவித்த புக்காரா விமானம் ஒன்று இந்த நடவடிக்கையின்போது புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது புலிகளின் மற்றுமொரு சாதனையாக கணிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் செல்வாக்கு தேடும் நோக்குடன் பெரும் எடுப்பில் திட்டமிட்டு நடத்தப்பட்ட முன்னேறிப் பாய்தலில் ஈடுபட்ட படையினர் இன்று பின்வாங்கிவிட்ட செய்தி அரசுக்கு பெரும்அதிர்ச்சியை ஏற்படச் செய்திருக்கிறது.

புலிகளின் வீராவேசப் பாய்ச்சலினல் அரசின் முன்னேறிப் பாய்தல் குழம்பிப் போயுள்ளதை அடுத்து ஜனதிபதி சந்திரிகா படை உயர் அதிகாரிகளை அழைத்து அவசர மாநாடு கூட்டினர்.

இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றி எதுவும் வெளிவரவில்லை.

மண்டைதீவு முகாம் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டு 150க்கும் மேற்பட்ட படையினரைகொன்றும்ஆயுதங்கள் பலவற்றை புலிகள்கைப்பற்றியபோதும் இரவிரவாக உயர் மாநாடுகளைக் கூட்டி விடியவிடிய கலந்துரையாடிய போதிலும் தீர்க்கமான முடிவெதனையும் எடுக்க முடியாத சந்திரிகா இனியும் ஒரு முடிவெடுப்பார் என்று எதிர்பார்க்கமுடியாது.

புலிகளின் பலத்தைப் பற்றித் தவருக கணித்து தமிழீழத்துக்கு வந்த இந்தியப் படைகளுக்கு புலிகள் அன்று நல்ல பாடம் படிப்பித்தார்கள்.

இன்று புலிகளின் இராணுவ பலம் மேலோங்கியுள்ள நிலையில் சிறிலங்கா அரசு அவர்களுடன் மோதித்தான் பிரச்னைக்கு தீர்வு காணமுடியும் என்று நினைத்தால் ஆழம் அறியாமல் காலை விடுவது போன்ற நிலைதான் அரசுக்கு ஏற்படும்.

மூன்ரும் ஈழப்போரில் அரசுக்கு பெரும் இழப்புக்களை தொடர்ந்து ஏற்படுத்திவரும் விடுதலைப் புலிகள் ராணுவரீதியில் இலங்கை படையினரைவிட மேலோங்கிய நிலையிலே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

'ஒப்பரேஷன் புலிப்பாய்ச்சலை' அடுத்து படையினர் பின்வாங்கி இருக்கின்றபோதிலும் அங்கு மக்கள் மீண்டும் தங்கள் பகுதிகளுக்கு செல்வதற்கு அந்தப் பகுதியில் உருக்குலைந்துள்ள சடலங்கள், படையினர் வைத்திருக்கக் கூடிய வெடி குண்டுகள் தடையாக இருக்கின்றன. இவை யாவும் துப்பரவு செய்யப்பட்டபின்னர் இடம்பெயர்ந்த மூன்றரை லட்சம் மக்களும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பலாம்.

அரச படைகளுக்கு எதிராக பாரிய தாக்குதல தொடுத்து நூற்றுக்கணக்கான படையினரைக் கொன்று அவர்களை பின் வாங்கி ஓடச்செய்ததன் மூலம் தமிழ் மக்களை மீண்டும் பேரழிவிலிருந்து விடுதலைப் புலிகள் காப்பாற்றிவிட்டார்கள். -ரி

---

# இந்தியாவின் உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிட்டு வருகிறது

## இந்திய அமைச்சர் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

காஷ்மீர் பள்ளத்தாக்கில் பீதியைக்கட்டவிழ்த்து விட்டு தேர்தல் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட பாகிஸ்தான் செய்யும் முயற்சிகளை இந்தியா முறியடிக்கும் என்று உள்துறை இணை அமைச்சர் திரு. ராஜேஷ் பைலட் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் மனிதஉரிமைகள் மீறப்பட்டு வருவதாக பாகிஸ்தான் ஓலமிட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

காஷ்மீரில் நிலைமை மேம்பட்டு வருவதாகவும் அங்கு விரைவில் அரசின் நடவடிக்கைகள் தொடரப்பட்டுவிடும் என்றும் திரு. ராஜேஷ்பைலட் கூறினர்.

இந்தியாவில் குழப்பத்தை உண்டுபண்ணும் முயற்சிகளில் பாகிஸ்தான் வெற்றிபெருது என்றும் ஏனெனில் இந்தியாவின் பாதுகாப்பு படையும் உளவு அமைப்புகளும் உஷாராக இருப்பதாக அமைச்சர் பாகிஷ்தானை எச்சரித்தார்.

இந்தியாவின் உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவதாகவும் திரு. பைலட் குற்றம் சாட்டினர்.

பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக அறிவிக்குமாறு அமெரிக்காவை திரு. ராஜேஷ் பைலட் மீண்டும் கேட்டுக் கொண்டார். -ரி

---

# பெருந்தொகையான படையினர் படுகாயமடைந்துள்ளனர்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளின் ''புலிப்பாச்சல்'' இராணுவ நடவடிக்கையின் போதுதான் பெருந்தொகையான இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாக இராணுவத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இதுபற்றி இராணுவம் மேலும் தெரிவிக்கையில்: ''தற்போதைய வடபகுதி இராணுவ நடவடிக்கையில் படுகாயமடைந்த இராணுவத்தினரில் ஒரு தொகுதியினர் கொழும்பிலுள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதை தவிர பலாலி இராணுவ முகாமிலும், வவுனியா இராணுவ முகாமிலுள்ள இராணுவ வைத்தியசாலைகளிலும் காயமடைந்துள்ள இராணுவத்தினர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொழும்பிலுள்ள ஸ்ரீஜெயவர்தனபுர ஆஸ்பத்திரியில், மேற்படி மோதலில் காயமடைந்த இராணுவ அதிகாரிகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதே போன்று பனகொடை இராணுவ முகாமிலுள்ள ஆஸ்பத்திரியிலும், அநுராதபுரத்திலுள்ள ஆஸ்பத்திரியிலும் படுகாயமடைந்த இராணுவத்தினர் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த வைத்தியசாலைகள் அனைத்துக்கும் மேலதிகமாக சத்திர சிகிச்சைக்கான கருவிகள், மருந்துவகைகள், டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் அனைவரையும் சுகாதார அமைச்சு விசேட வாகனங்களில் அனுப்பிவைத்துள்ளது. வி-

---

# 200 ராணுவ தளங்களை அமெரிக்கா மூடும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள இருநூறுக்கும் அதிகமான உள்ளூர் இராணுவத் தளங்களை மூடிவிட ஜனதிபதி கிளிங்டன் சம்மதம் தெரிவித்துள்ளார்.

போர்ச் சூழல் முடிவுக்கு வந்து விட்டதால், இந்த முகாம்கள் தேவையில்லை என தனிநபர் விசாரணைக் குழு ஒன்று அமெரிக்க ஜனதிபதிக்கு சிபார்சு செய்திருந்தது.

இந்த முகாம்களை மூடிவிடுவதால், அடுத்த 20 வருட காலத்தில் இரண்டாயிரம் கோடி டாலர்களை மீதப்படுத்தலாம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. கி சி

---

# இலங்கைப் பயணிகளிடம் கரன்ஸி நோட்டுகள் மீட்பு

[சென்னை]

சென்னை விமான நிலையத்திலிருந்து கொழும்பு செல்லவிருந்த இரண்டு இலங்கை பயணிகளின் வயிற்றுக்குள் ரூபா 41 லட்சம் மதிப்புள்ள வெளிநாட்டு றவலர்ஸ் செக்குகள், கரன்ஸி நோட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

அவ்விருவரும் உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளனர். மாத்திரை வடிவில் இவர்கள் விழுங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. ரி

---

# புலிகளுக்கு எதிராக இந்தியா நடவடிக்கை

(புதுடில்லி)

இந்திய மத்திய அரசு விடுதலைப்புலிகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கும் என்று இந்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ராஜேஷ் பைலட்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்தில் மீண்டும் தலைதூக்க அனுமதிக்கப்படமாட்டாது.

விடுதலைப்புலிகள் தமிழகத்தை ஒரு தளமாக ஆக்கியிருந்தார்கள் என்றும் ஜெயலலிதா தலைமையிலான அரசு அதற்கு உதவியளித்தது என்றும் அவர் குற்றம் சாட்டினர். -ரி

---

# குருநகர்ப் பகுதியில் பதுங்குகுழிகள் அமைப்பு

(குருநகர்)

குருநகர் பகுதியில் புதிய பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

5ம் குறுக்கு தெரு, தண்ணீர் தாங்கிவீதி, கடற்கரைவீதி, புதியகடற்கரைவீதி, மத்திய கிழக்குவீதி ஆகிய இடங்களிலுள்ள வீதிகளுக்கு அருகாமையில் இப்பதுங்கு குழிகள் இம்மக்களால் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மக்களில் பெரும்பாலானோர் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதுடன் பகல் நேரங்களில் உள்ள மக்களுக்கு இரவுநேரங்களில் அண்மையிலுள்ள பாடசாலைகளுக்குச்சென்று இரவைக்கழிக்கிருர்கள். -95

---

# சங்கானை கல்விக் கோட்டம் கோப்பாயில் இயங்கும்

[வட்டுக்கோட்டை]

சங்கானைக் கல்விக் கோட்டம் யாழ்.வலயம் 2 அமைந்துள்ள கோப்பாயில் இன்று திங்கட்கிழமை 17ம் திகதி முதல் இயங்கவுள்ளதாகவும் சங்கானைக் கோட்ட பணிமனை

(5ம் பக்கம் பார்க்க)

# முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையில் 75 மாணவர்கள் உயிரிழந்தனர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு, வடக்குப்பகுதிகளில் படையினரால் நடத்தப்பட்ட முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் போது எழுபத்தைந்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பலியானதாக தெரியவருகிறது.

கண்மூடித்தனமான புக்காரா குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்கள் போன்றவற்றினாலே இந்த மாணவர்கள் உயிரிழந்ததாக தெரிய வருகிறது.

க. பொ. த. உயர்தர வகுப்பு 20 மாணவர்கள் ஆண்டு 1 முதல் 10 வரையிலானோர் 6 பேர் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட மாணவர் இத்தாக்குதலில் கொல்லப் பட்டுள்ளனர்.

இதேவேளை நவாலி சென் பீற்றேர்ஸ் தேவாலயம் மீது சிறிலங்கா விமானப்படையின் புக்காரா விமானம் நடத்திய குண்டு வீச்சுதாக்குதலில் 63 சிறுவர்கள் கொல்லப்பட்டதாக சிறுவர் நலன் தொடர்பான நிறுவனம் திரட்டிய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களின் போது பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் காயமடைந்துள்ளதாகவும் பல மாணவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் ஒப்பரேசன் முன்னேறிப் பாய்தலில் சேதமடைந்தவைகளில் வலிமேற்கு வடக்கு பகுதிகளிலுள்ள பல பாடசாலைகளும் அடங்குகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. -ரி

## மாநகர மன்றப் பகுதிக்கு நன்னீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கரையோரப் பகுதி மக்களின் குடிநீர் பிரச்னையைப் போக்குமுகமாக யாழ். மாநகராட்சி மன்றம் இப்பகுதிகளில் நீர்த்தாங்கிகள் அமைத்து நன்னீர் விநியோகத்தை மேற்கொண்டு வருவதாக மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளர் தெரிவித்தார்.

மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட கரையோரப்பகுதிகளான எழிலூர், திருநகர், நாவாந்துறை, சூரியவெளி கண்ணபுரம் ஆகிய பகுதிகளிலேயே நீர்த்தாங்கிகள் மூலம் இப்பகுதி மக்களுக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. கோண்டாவில் பகுதியிலிருந்து பவுசர்கள் மூலம் நன்னீர் எடுத்துவரப்பட்டு இந்நீர்த் தாங்கிகள் தினமும் நிரப்பப்பட்டுவருகின்றன. இப்பகுதிகளிலுள்ள பொதுமக்கள் தமது நன்னீர்த் தேவைகளை இத்தாங்கிகளிலிருந்து பெற்று வருகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 162

இடம் பெயர்ந்தவர்களுக்கு

## உதவ சனசமூக நிலையங்களுக்கு அழைப்பு

[யாழ்ப்பாணம்]

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் வலி வடக்கு, மேற்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்கு யாழ் மாநகர பகுதியில் உள்ள சனசமூக நிலையங்கள் முன்வருமாறு சமாச தலைவர் கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சனசமூக நிலையங்கள் இடம் பெயர்ந்த மக்களுக்கான உடு புடவைகள் சமையல் பாத்திரங்களை சேகரித்து ஈச்சமோட்டையிலுள்ள யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க பணிமனையில் ஒப்படைக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். 170

கோப்பாய் பகுதியில்

## தங்கியிருந்தவர்களுக்கு உலர் உணவு விநியோகம்

(நல்லூர்)

தற்பொழுது இராணுவநடவடிக்கையால் இடம்பெயர்ந்தோருக்கு உலர் உணவு வழங்க கோப்பாய் பிரதேச செயலர்நடவடிக்கைஎடுத்துள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மூகாம்களில் தங்கியிருப்பவர்கள் உறவினர்கள், நண்பர்கள் வீட்டில் இருக்கும் குடும்பங்களின் பெயர்பட்டியல்களை உடன் அனுப்பிவைக்கும்படி பிரதேச செயலரால் கிராமசேவையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான பெயர்ப் பட்டியல்கள் தயாரிக்கும் பணியில் கிராமசேவையாளர்கள் ஈடுபட்டுள்ளனர், 175

### சங்கானை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் டணியாற்றும் சகல ஊழியர்களும் தவறாது இன்று சமுகமளிக்க வேண்டுமெனவும் சங்கானைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ் வலயம் இரண்டில் வைத்து ஆசிரியர்களின் இம் மாதச்சம்பளம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -139

### யாழ். ஆஸ்பத்திரியில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கத்தவர்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து கடமை புரிவதற்கு ஏற்பாடுகள் செய்யப் படவுள்ளன.

மேற்படி வைத்தியசாலையில் குடும்ப அங்கத்தவர்களுடன் தங்கியிருந்து கடமை புரிய விரும்பும் சகல தர ஊழியர்களும் தங்கள் விபரங்களை வைத்தியசாலை நிர்வாகக் காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். 90 சி

## இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி அப்பாவிப் பொதுமக்களைக் காப்பாற்றுமாறு யாழ். பல்கலைக்கழகத்தை சேர்ந்த பல்வேறு அமைப்புக்கள் கூட்டாக இணைந்து சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிடம் வலியுறுத்தியுள்ளன.

யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து ஜனாதிபதிக்கு அண்மையில் அனுப்பி வைத்த மகஜரிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்கள் ஷெல்தாக்குதல்களை நடத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழிப்பதை உடன்நிறுத்திக் கொள்ளவேண்டும்.

யாழ். பல்கலைக் கழகம், தொழில்நுட்பக் கல்லூரி உட்பட பல பாடசாலைகள் கோவில்கள், தேவாலயங்களில் எல்லாம் லட்சக்கணக்கான அகதிகளை நிரம்பி வழிகின்றன. இந்த அகதிகள்தமது வீடுகளை சொத்துக்களை இழந்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிடும்போது அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழிப்பதுடன் பொதுமக்களின் சொத்துக்களை அழிப்பது ஆகியனதான் தங்களின் நோக்கமாக இருந்திருக்காது என்று நம்புகிறோம் என்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 162

### வீஜேவீர கொலை: விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும்

[கொழும்பு]

ஜனதா விமுக்தி பெரமுன தலைவர் ரோகண விஜேவீரா கொலை தொடர்பாக விசேட விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படவுள்ளதாக நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் உறுதி அளித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை தம்மைச் சந்தித்த தூதுக் குழுவினரிடம் இந்த உறுதி மொழியை அவர் வழங்கினார். -க

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் சித்த மருத்துவத் துறை (கைதடி) சகல மாணவர்களையும், மாணவர் உதவி வழங்குதல் சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்கு நாளை 18ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சித்த மருத்துவத் துறையில் கூடுமாறு சித்த மருத்துவ மாணவர் மன்றம் கேட்கின்றது.

### தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி குருகுலம் சிறுவர் பரமரிப்பு நிலையத்தில் கடமையாற்றும் சு.சபாரத்தினத்தின் குடும்பத்தவர்கள் எங்கிருந்தாலும் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் இருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டச் செயலகத்தோடு தொடர்பு கொள்ளும் படி கேட்கப்படுகின்றனர்.

### இரு தளபதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடல், காரைநகர்).

★ கப்டன் தாயகி (மகாலிங்கம் ரஞ்சினிதேவி, டருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்).

★ லெப். பூமதி (கனகரட்ணம் சாந்தினி, கிழக்குத் தெரு, வல்வெட்டித்துறை).

★ லெப். தவமலர் (துரைசிங்கம் ஹேமாவதி, நவாலி வீதி, மானிப்பாய்).

★ லெப். யாழரசி (சின்னராசா அன்ரனிமாலா, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்).

★ லெப். சோபிதா (தர்மலிங்கம் மாலதி (கற்கோவளம் பருத்தித்துறை).

★ 2ம்லெப். மைவிழி லூயிஸ் டொறேட்டா, ஒடக்கரை வீதி, குருநகர்).

★ 2ம் லெப். அருள்மதி (வெற்றிவேலாயுதம் விஜயந்திரராணி, சுண்டிக்குளம் தெற்கு, விசுவமடு, கிளிநொச்சி.

★ 2ம் லெப். நித்தியா (மாரிமுத்து மஞ்சுளா, கரையூர், குடத்தனை).

★ 2ம்லெப். நதியரசி (செல்வராசா சாந்தவதனி, புலிக்குளி வாய்க்கால், முல்லைத்தீவு)

### கடற் கரும்புலிகள் விபரம்

★ கடற் கரும்புலி மேஜர் தங்கம் (வீரய்யா மயில்வாகனம், பதுளை).

★ கடற் கரும்புலி மேஜர் செந்தாளன் / நியூட்டன் (பிரான்சிஸ் டக்ளஸ், கடற்கரை வீதி, பாசையூர், குருநகர்).

★ கடற் கரும்புலி கப்டன் செவ்வானம்) கிருஷ்ணபிள்ளை சுமதி, மூளாய் தெற்கு, சுழிபுரம்).

★ கடற் கரும்புலி கப்டன் தமிழினி (சிவப்பிரகாசம் கனிமொழி, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை. க சி

### வடமராட்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வல்வை மயிலியதனை பகுதியில், வீட்டிற்கு முன்னாள் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் பொன்னுத்துரை நடராசா [மார்க்கண்டு] 55 வயது என்பவர் வயிறு பிளந்த நிலையில் மரணமானார்.

மயிலியதனையில் விழுந்த ஷெல்லினால் இராசதுரை லலிதாமலர் [42 வயது] நடராசா சகுந்தலை]75வயது] மயிலியதனையில் வீழ்ந்த ஷெல்லினால் எஸ். விஜயன் (31 வயது) அவரது மகன் வி. கௌமதன் (வயது 1½) ஆகிய நால்வரும் படுகாயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையிலும் வல்வை இந்திராணி ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை நெடிய காட்டுப்பிள்ளையார் கோவில் சனசமூக நிலையம், வளலாய், தொண்டமானாறு கெருடாவில் வல்லைப்பகுதிகளில் அதிகளவு ஷெல்கள் விழுந்து வெடித்தன

நெடியகாட்டுப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்களினால் நெடியகாடு பிள்ளையார் ஆலய பூங்காவன மண்டபம், கணபதிபடிப்பகம், கணபதி அரைக்கும் ஆலை போன்றவை பலத்த சேதமடைந்தன.

இதேவேளை தொண்டமானாறு கடற்பகுதியில் இருந்து தொண்டமானாறு, கெருடாவில், ஊரிக்காடு பகுதிகளை நோக்கி கடற்படையினர் கடுமையான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். பீரங்கிப் படகில் இருந்து கலிபர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல்களை அடுத்து தொண்டமானாறு, கெருடாவில் பகுதி மக்களும், அச்சுவேலிப்பகுதி மக்களும் அயற் கிராமங்களை நோக்கி வெளியேறினர்.

கெருடாவில், தொண்டமானாற்றில் இருந்து வெளியேறியவர்கள், உடுப்பிட்டி, இமையாணன், நெல்லியடிப் பகுதிகளில் தஞ்சமடைந்தனர். அச்சுவேலியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் தஞ்சமடைந்தனர்.

(160-51-90-சி]

### எடித்தாரா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை தெரிவித்தது:

தகர்க்கப்பட்ட இக்கப்பலின் முன்பகுதி கடலினுள் மூழ்கிவிட்டதாகவும் பின் பகுதி சிறிது சிறிதாக மூழ்கிக் கொண்டிருப்பதாகவும் அச் செய்தி தெரிவித்தது.

கரும்புலிகளின் வெடிகுண்டுத்தாக்குதலால் கப்பலுக்கு பாரிய சேதம் ஏற்பட்டிருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்:

### மிகப் பெரும்

(1ம் பக்கத் தொடர்சி)

கடற் புலிகள் கடற்படைத் தளத்தினுள் ஊடுருவி மிகப் பெரும் தாக்குதலை படையினருக்கு எதிராக நடாத்திக் கொண்டிருக்கையில் கடற் கரும்புலிகள் பாரிய இரு கப்பல்களையும் அழித்தமை கடற் சமரில் புதியதொரு பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத் தாக்குதலில் கடற்புலிகளோடு, கடற் கரும்புலிகள் சுலோஜன் விஷேட நீரடி நீச்சல் பிரிவு என மூன்று கடற்புலிகளின் படைப் பிரிவுகள் பங்கு பற்றியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -சி

### அரச படையினருக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வதற்கு கடற்படை, விமானப்படையின் உதவிகள் தேவை. இது இல்லாதுபோனால் யாழ்ப்பாணத்தின் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதில் அரசபடைகள் பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும்

கடலில் மூழ்கடிக்கப்பட்ட 'எடித்தாரா' கப்பல், படையினருக்கு உணவு விநியோகம், படையினரை ஏற்றி இறக்கும் பணிகளிலும், ஆயுத விநியோகத்திலும் முக்கிய பங்கை வகித்தது என்றார். ம-சி

### காங்கேசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன் துறைத் துறைமுகப் பகுதியில் தரித்து நின்ற 'எடித்தார' என்ற கட்டளைக் கப்பல், எல் சி எம். என அழைக்கப்படும் மூன்று லான்டிங்கிறுவ்ற், ஒரு டோறா, ஏழு கொன்டைனர், சில பீரங்கிக் கப்பல்கள் ஆகியவையே கடற் புலிகளின் பெருமெடுப்பிலான தாக்குதலுக்குள்ளாகிப் பலத்த சேதம் அடைந்தன.

அப்பகுதியினுள் திடீரென நுழைந்த கடற் புலிகளின் படையணி, அதிகாலை 1-15 மணியளவில் தங்களது திடீர்த் தாக்குதலை ஆரம்பித்தனர் துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிடப்பட்டிருந்த இப்போர்க் கப்பல்களை ஊடுருவி, கடற் புலிகளின் அணி மிகப் பெரும் தாக்குதலை ஆரம்பித்தது.

மிகக் கடும் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் கடற் கரும்புலிகளும் சுலோஜன் விசேட நீரடி நீச்சல் பிரிவினரும் நடாத்திய தாக்குதலினால் இரண்டு போர்க் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன

கடற் கரும்புலிகளால் தகர்த்து அழிக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்ட இவ்விரு கப்பல்களினுள் இருந்த கடற்படையினரும், அங்கு சுற்றிவர நின்ற ஏனைய போர்க் கப்பல்களில் இருந்த பல கடற்படையினரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களில் இருவர் அதிகாரிகள். 17 படையினர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சி ம

## ஹங்கேரியில் 'ட்ரக்' வண்டியில் மூச்சுத்திணறி இறந்த நிலையில் 18 இலங்கையரின் சடலங்கள் மீட்பு

(லண்டன்)

ஹங்கேரியில் ட்ரக் இழுவை வண்டி ஒன்றில் மூச்சுத்திணறி இறந்த நிலையில் 18 இலங்கையரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஜெர்மனிக்கு சட்ட விரோதமாக ஹங்கேரி ஊடாக இந்த ட்ரக்கில் சென்ற சமயம் மூச்சு திணறி இறந்ததாக தெரிவிக்கப்பட்டது

மேற்கு ஹங்கேரி நகரமான கியோருக்கு வெளிப்புறத்தில் அதிகாரிகள் இந்த இழுவை வண்டியை திறந்து பார்த்த போதே இச் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

மேலும் 19 இலங்கையர்கள் இந்த ட்ரக்கில் சென்றதாகவும் அவர்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சடலங்களில் ஒரு யுவதியின் சடலமும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பல்கேரியா இலக்கத் தகட்டுடன் காணப்பட்ட இந்த ட்ரக் வண்டியின் சாரதியை பொலிஸார் தேடி வருகிறார்கள்.

தாங்கள் ஒவ்வொருவரும் ஆட்களை கொண்டு செல்பவர்களுக்கு 800 டொலர் கொடுத்ததாக அவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர். ரி-சி

## வட்டு. சங்கரத்தையில் 10 இராணுவத்தினரின் சடலங்கள் கிடக்கின்றன

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி கோவில் குளத்தடியில் இராணுவத்தினரின் பத்து சடலங்கள் சிதறி கிடப்பதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வலி மேற்குப் பகுதியில் பெருமளவு ஆட்லறி ஷெல்கள் வெடிக்காத நிலையில் கிடப்பதாகவும் அப்பகுதியிலிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

படையினர் கவசவாகனத்தால் வலி. மேற்கில் பல பகுதிகளிலும் வீதியோரங்களிலிருந்த மதில்கள் அடியோடு தகர்ந்துள்ளதாகவும் வீடுகள் தகர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். -சி

## பலாலி முகாமிலிருந்து கடும் ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்றுக் காலையும் வலிகாமம் வடக்குப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதிகாலையிலிருந்து இராணுவத்தினர் இப்பகுதிகளை நோக்கி விட்டுவிட்டு ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் தெல்லிப்பளை, குப்பிழான, மயிலங்காடு, அளவெட்டி, சுன்னாகம், மல்லாகம், உடுவில், சுந்தரோடை, சண்டிலிப்பாய்ப் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

அளவெட்டிப் பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் பத்தானையைச் சேர்ந்த செ. மகாலிங்கம் (வயது 38) படுகாயம் அடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

170 90 சி

## வயோதிப மாது அதிர்ச்சியால் மரணம்

(நெல்லியடி)

பலாலியிலிருந்து வடமராட்சியை நோக்கி ஏவப்பட்ட ஷெல் வீச்சின் போது வயோதிபமாது ஒருவர் அதிர்ச்சியினால் மரணமானார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் பருத்தித்துறை 2ம் குறுக்குத் தெருவில் நிகழ்ந்துள்ளது.

குணரத்தினம் வள்ளிப்பிள்ளை [வயது 60] என்னும் வயோதிப மாதுவே இவ்வாறு மரணமானவராவார்.

160- 90- சி

## தபாலக ஊழியர்களை கடமைக்குதிரும்ப அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபாலகத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் இன்று திங்கட்கிழமை கடமைக்குத் திரும்புமாறு, யாழ். பிரதம தபால் அதிபர் சு. கோடீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

உள்ளூர்த் தபால்களைச் சீராக விநியோகிக்கும் முகமாகச் சகல தபால் விநியோக ஊழியர்களையும் சமூகம் கொடுக்குமாறும் தபால் அதிபர் கேட்டுள்ளார். 170 சி

## மாகோ, லங்கா முடித்த நேற்று வந்தன

(யாழ்ப்பாணம்)

திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து 1,950 மெற்றிக் தொன் கோதுமை மாவை ஏற்றிக்கொண்டு ஹபறனை கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இக்கப்பல் இன்று காலை பருத்தித்துறைத் துறைமுகம் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை கொழும்பில் இருந்து உணவுப் பொருட்கள், மண்ணெண்ணை, தேங்காய் எண்ணை ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு லங்கா முடித்த, மாஹோ சப்பல்கள் நேற்றுக் காலை பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

162 170 சி

## பலாலி ஷெல்லுக்கு சகோதர சிறுவர்கள் பலி

(மானிப்பாய்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் வீச்சுக்கு ஊஞ்சலாடிக்கொண்டிருந்த இரு சகோதரச் சிறுவர்கள் துடிதுடித்து பலியானார்கள்.

கடந்த 13ம் திகதி வியாழக்கிழமை பி. ப 2-30 மணியளவில் மயிலணியிலுள்ள தமது வீட்டு முற்றத்தில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்த சீவரத்தினம் கஸ்தூரி (9 வயது), சீவரத்தினம் செந்தூரன் (7 வயது) ஆகிய இரு குழந்தைகளுமே படையினரின் அகோர ஷெல்வீச்சுக்கு இலக்காகி உடல் சிதறிப் பலியானவர்களாவர். 71-சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 686 இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a News paper at the General Post Offices Sri Lanka under Licence number B/1683613.

## நிர்வாகசேவை அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை, நல்லூர் பிரதேச சபை உள்ளிட்ட வலிகாமப்பகுதியிலுள்ள பிரதேச சபைகளினது நிர்வாகப் பரப்பினுள் காணப்படும் சகல சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்கள் (சனசமூக நிலையங்கள்) சார்ந்த நிர்வாகங்களின் (நிர்வாகசபை) உறுப்பினர்கள் அனைவரையும் இன்று திங்கள் மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திற்கு தவறாது சமூகம் தருமாறு தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## அனுமதி அட்டைகள் வந்தன

(குருநகர்)

யாழ். மாவட்டத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் யாவும் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து கிளாலி ஊடாக எடுத்துவரப்பட்டுள்ளது.

எனினும் பரீட்சை நடத்துவதற்கான பரீட்சை ஆவணங்கள் இதுவரை வந்துசேரவில்லை என யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. 95-சி

## மரணம்

(மானிப்பாய்)

நவாலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற புக்காராத் தாக்குதலில் காயம் அடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த செல்வரட்ணம் என்ற 50 வயது நபர் நேற்று மரணமானார்.

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து வந்த இவர் நவாலியில் தங்கியிருந்தார். 71 சி

## புலிப் பாய்ச்சலின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வலி- மேற்கு, வலி வடக்கு பகுதியில் படையினர் மேற்கொண்ட 'ஒப்பரேஷன் லீப் போவேட்' இராணுவ நடவடிக்கையை முறியடிக்க, விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனால் பெயரிடப்பட்டு தற்போது மேற்கொள்ளப்பட்டும், புலிப் பாய்ச்சலின் ஒரு அங்கமாகவே இந்த கப்பல் தகர்ப்பு தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

',புலிப் பாய்ச்சல்'' தாக்குதலில் புலிகளின் தரைப்படை கடற்படை, விமான எதிர்ப்பு பீரங்கிப் படை என முப்படைகளும் பங்கு பற்றியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. சி

## மூளாய், பொன்னாலை வரை படையினர் பின்வாங்கினர்

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு பகுதியில் விடுதலைப் புலிகளின் 'புலிப் பாய்ச்சல்' நடவடிக்கையால் பின்வாங்கிச் சென்ற படையினர் தற்போது மூளாய், பொன்னாலை, வட்டு-அரசடிப் பகுதியில் நிலைகொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வட்டுக்கோட்டையின் பின்புறமான அரசடியிலும், மூளாய் பிள்ளையார் கோவிலடி. ஆஸ்பத்திரி பகுதி, பொன்னாலைச்சந்தி, கிருஷ்ணன் கோவிலடிப் பகுதிவரை படையினர் பின்வாங்கிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் நிலைகொண்டிருந்த பகுதிகளில் துப்பரவாக்கும் பணிகள் நடந்துகொண்டிருப்பதால் உடனடியாக அப்பகுதிகளுக்கு செல்லவேண்டாமென விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். -சி

## நிமிடத்துக்கு ஒரு ஷெல் தாக்குதல்

(கொழும்பு)

வடக்கில் தற்போது இலங்கை இராணுவம் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கையின்போது, நிமிடத்திற்கு ஒரு ஷெல் வீதம் பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது பிரயோகிக்கப்படுகிறது என்று பி.பி.ஸி தெரிவித்தது.

பி.பி.ஸி. மேலும் தெரிவிக்கையில்; இந்த யுத்தத்தில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இறந்துள்ளனர். 470 பொதுமக்கள் காயம் அடைந்துள்ளனர். 3 லட்சம் பேர் அகதிகளாக உள்ளனர் என்றும் கூறியது. ம சி

## அளவெட்டிபகுதியில் துர்நாற்றமாம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையின் பின், அளவெட்டிப் பகுதிகளில் எங்கு சென்றாலும் துர்நாற்றமே வீசுகின்றது.

ஷெல் தாக்குதல்களின் போது சிதறிப் பலியான கால் நடைகளின் உடல்கள் அழுகியே நாற்றம் வீசுகின்றது.

வயல் பகுதிகளிலும் வீதியோரங்களிலும், குடியிருப்புப் பகுதிகளிலும் கால்நடைகளின் சிதறிய உடல் பகுதிகளும், இராணுவத்தினரின் சடலங்களும் காணப்படுகின்றன.

90 ரி

## இராணுவப் பொருட்களை ஒப்படைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

முன்னேறிவந்த படையினர் பின் தப்பி ஓடியபோது விட்டுச்சென்ற இராணுவப் பொருட்களை விடுதலை புலிகளிடம் ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளான பிரதேசங்கள் தற்பொழுது எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இப் பிரதேசங்களுக்குள் செல்லும் பொதுமக்கள், அந்தப் பிரதேசங்களிலிருந்து இராணுவம் மிக வேகமாக பின்வாங்கி ஓடிச் சென்றதால் பெருந்தொகையான இராணுவப் பொருட்களை விட்டுச் சென்றுள்ளது

இவற்றில் பெரும்பாலானவை, மிகவும் ஆபத்தானதும், உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியவையாகும். ஆகவே நீங்கள் காணுகின்ற, கிடைக்கின்ற அனைத்து இராணுவத் தளபாடங்களையும், அவர்களின் ஏனைய அனைத்துப் பொருட்களையும் அருகிலுள்ள போராளிகளின் முகாம்கள், செயலகங்களுக்கு அறியப்படுத்திச் சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். சி

## மூழ்கிய

(1-ம பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த படையினரின் சரியான எண்ணிக்கையை பாதுகாப்பு அமைச்சு வெளியிடவில்லை

எனினும் கப்பல் மூழ்கிக்கொண்டிருக்கையில், உயிரிழந்த படையினரின் சடலங்கள் யாவும் மீட்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. -சி

1ம் பக்கத் தொடர்ச்சி)

## கடற் புலிகளின் கை ஓங்கிவிட்டது

'எடித்தாரா' கட்டளைக் கப்பல் தகர்க்கப்பட்டதால் கடற்புலிகளின் கப்பல்களின் நடமாட்டத்தை கண்காணிக்கும் சக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்ட கட்டளைக் கப்பல்களே இல்லாது போய்விட்டது இதனால் கடற்புலிகளின் நடமாட்டம் வடபகுதி கடலில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 'ராடர், பொருத்தப்பட்ட கட்டளைக் கப்பல்களை அழிப்பதன் மூலம் கடற்பரப்பை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வர கடற்புலிகள் திட்டமிட்டுவந்தனர். இத்தாக்குதலின் மூலம் அது பெருமளவு நிறைவேறிவிட்டதாவும் ஏஜென்ஸி செய்து ஒன்று தெரிவித்தது.

சி